ரஷ்யா வளர வேண்டுமென்ற எண்ணம் கிடையாது. நாங்கள் இந்தியர்களாக, இந்தியாவின் வளர்ச்சிக்காகத்தான் எங்களை ஆட்படுத்திக் கொண்டிருக்கிறோம். அணுசக்தி வரவில்லையென்று சொன்னால், அமெரிக்காவுடன் ஒப்பந்தம் போட்டிருக்கிறோம். அதற்கு வரவேண்டிய யுரேனியத்தை ஒவ்வொரு நாட்டிலிருந்தும் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதற்குள் அரச மரத்தைச் சுற்றிவிட்டு அடி வயிற்றைத் தொட்டுப் பார்த்து குழந்தை பிறக்கவில்லையேயென்றால், அது எப்படிச் சரியாக இருக்க முடியும்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் (குறுக்கிடு)

பிற்பகல் 12-40

4. தமிழகத்தில் மேலவையை மீண்டும் தோற்றுவிக்க நாடாளுமன்ற இரு அவைகளும் ஒப்புதல்—பாராட்டு

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. டி. சுதர்சனம் அவர்கள்.

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றக் கூட்டத்திலேயே நீண்ட நெடுங்காலமாக சட்ட மேலவை வரவேண்டும் என்று ஒரு கோரிக்கை வைத்து, இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே இங்கே அதற்குத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, இந்தக் கூட்டத் தொடர் இங்கே நடக்கும்போதே டெல்லி மக்களவையிலும், நாடாளுமன்ற மேலவையிலும், இரண்டு அவைகளிலும் அடுத்தடுத்த நாள் அந்தத் தீர்மானம் நிறைவேறி, இன்று குடியரசுத் தலைவர் அவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்காக அகில இந்திய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், பாரதப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) சட்ட அமைச்சர் திரு. வீரப்ப மொய்லி அவர்களுக்கும், உள் துறை அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்களுக்கும், இதற்கெல்லாம் மூலகாரணமாக விளங்கிய தமிழக முதல்வர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) காங்கிரஸ் கட்சி தனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றது.